3-JAN 1956 MADRAS

"சம்பத்து தானம்"

Regd. No. M 6207

கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத பிர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

17 JUL 1954 MADRAS

மலர் 2 திருப்பூர் - ஜூலை 1 * 1954 * விலை 1 அணா இதழ் 17

கிராமோதய சங்கங்களின் ஆண்டுவிழா

[நாதகவுண்டன்பாளையத்தில் 12-6-'54-ந்தேதி பல்லடம் பிர்க்கா கிராமோதய கதர் சங்கங்களின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அது சமயம் தலைமைதாங்கிய சர்வ சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ அனந்த வாசுதேவ சகஸ்ரபுத்தே அவர்கள் செய்த பிரசங்கத்தின் சாரம் பின்வருமாறு] — ஆசிரியர்

கிராமப் பொருளாதாரம் ஓட்டைப்பானைமாதிரி

கிராம சங்கங்களின் வேலை விபரம் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இதன் காரணமாக ரூ. 8,000 வரையில் கிராமங்களுக்கு ரொக்க வரும்படி ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் நான் திருப்தியடையமாட்டேன். இந்த ஊரில் கோவாபரேடிவ் கிரெடிட் சொஸைட்டி இருக்கிறது. அதன் மூலமும், இதரர்களிடமிருந்தும் எவ்வளவு கடன் வாங்கப்பட்டிருக்கிறது என்றும், அதன் பொருட்டு வட்டியாக வெளியேபோகும் பணத்தைக் கவனித்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ரூ. 25,000 கடன் இருந்தால் சுமார் ரூ. 4,000 வரையில் வட்டியாக உங்களிடமிருந்து வெளியே போய்விடும். நமது தேசத்தில் ஒருவன் சராசரி ரூ. 20 வரியாகக் கொடுக்கிறான். நிலவரி நேரிடையாகக் கொடுக்கப்படுவது. இதைத்தவிர, புகையிலை, தீப்பெட்டி, முதலிய பொருள்களின் பேரில் கொடுப்பது மறைமுகமான வரியாகும். மேலும் இங்கு நான் காணும் அநேக பொருள்கள் நகரத்தில் இருந்து வந்தவைகளே. எனவே கிராமங்களில் வட்டி, வரி, இதர வகையில் எவ்வளவு ஐஸ்வரியம் வெளியே போகிறது என்றும் நீங்கள் அடுத்த வருஷ அறிக்கையில் புள்ளி விபரம் கொடுப்பீர்கள் என நம்புகிறேன். அப்பொழுதுதான் நாம், கிராமப் பொருளாதாரமாகிய பானையில் எவ்வளவு போட்டோம், எவ்வளவு வெளியே சென்றது பானையில் ஏதாவது தங்கியதா, இல்லையா, என்று தெரியவரும். இவ் விபரங்கள் இருந்தால்தான் நாம் அடுத்து செய்யவேண்டிய வேலையினுடைய சித்திரம் நன்றாக விளங்கும்.

நெசவும் இங்கேயே நடக்கவேண்டும்

உங்கள் அறிக்கை பிரகாரம் சுமார் ஒரு லட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்திருக்கிறீர்கள். இந்த நூலை நெய்வதன் மூலம் 20 முதல் 30 குடும்பங்கள் வரையில் பிழைக்க முடியும். அவர்கள் வரும்படியும் கிராமப் பொருளாதாரத்தை சீர்படுத்தும். தறிகாரர்களை குடியேற்றியோ, அல்லது நீங்களே நெசவு கற்றுக்கொண்டோ இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். அதன் பின்னர் துணிகளுக்கு அச்சு, சாயமிடுவதைப்பற்றி திட்டம் வகுக்கலாம்.

மூலதனப் பிரச்னை

உங்களிடம் மூலதனம் மிகவும் குறைவு என்று தெரிவிக்கப்பட்டது, இதை எப்படி அதிகரிப்பது. 50,000 ரூபாய்க்கு கதர் தயாரிக்க வேண்டுமானால் 25,000 மூலதனம் தேவைப்படுகிறது. இது என்னுடைய அனுபவம்-இதை எப்படி சேர்ப்பது? உங்கள் ஸ்தாபனத்தை சட்டபூர்வமானதாக நீங்கள் பதிவு செய்துகொண்டால் அகில இந்திய கதர் போர்டு மூலம் உங்களுக்கு உதவி கிடைக்கும். வருஷத்திற்கு ரூ. 16,000-க்கு உற்பத்தி என்று வைத்துக்கொள்ளுவோம்—இத்தொகையின் பேரில் உற்பத்திக்கும், விற்பனைக்கும் $6\frac{1}{4}$% சதம் மானியம் கிடைக்கும். மேலும் தறிகள், செக்குகள் போட்டால் அவைகளுக்காகவும் மானியம் பெறலாம். இவைகள் எல்லாம் நீங்கள் வேலை செய்ய ஆரம்பித்தால்தான் கிடைக்கும். தமிழ் நாட்டில் சென்ற வருஷம் 10 லட்சத்திற்கு கிராமோதய சங்கங்களின் மூலம் உற்பத்தியானதாக தெரியவருகிறது. இவைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தால் மேலே கூறப்பட்டுள்ளபடி உற்பத்திக்கு ரூ. 60,000 விற்பனைக்கு ரூ. 60,000 ஆக லட்சத்து இருபதினாயிரம் மானியம் கிடைத்திருக்கக் கூடும். 10% சதவிகித மூலதனமாவது கிடைக்க வேண்டுமென்பது காதி போர்டின் திட்டம்.

கிராமம் ஒரே குடும்பம் என்ற எண்ணம் வளர வேண்டும்

ஒரு நகரவாசியின் சராசரி வருமானம் ரூ. 900 என்றும், கிராமவாசியின் வருமானம் ரூ. 140 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. கிராமத்தில் நாள் முழுவதும் வேலைசெய்தாலும் ஒரு ரூபாய் கூலி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆனால் நகரத்தில் குறைந்த நேர வேலைக்கே ரூபாய் 2, 3, கூலியாகக் கிடைத்து விடுகிறது. நகரவாசியின் வாங்கும் சக்தி கிராமவாசியைக்காட்டிலும் அதிகமாக இருக்கிறது. எனவே அவர்கள் தாங்கள் விரும்பிய விலைக்கு கிராமப் பொருள்களை வாங்கி விடுகிறார்கள். இந் நிலைமை மாற வேண்டும். நீங்கள் நிர்ணயிக்கும் விலைக்கே அவர்கள் உங்கள் பொருள்களை வாங்க வேண்டும். அதற்கு நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே குடும்பம் மாதிரி வேலை செய்ய வேண்டும். இவ்வகையில் நீங்கள் அடுத்த வருஷம் வேலை செய்வீர்கள் என்று நம்புகிறேன். எனக்களித்த வரவேற்புக்கு என் நன்றிகள்.

3-JAN 1956

கிராமோதயம்

ஜூலை 1 1954

சம்பத்து தானம்

[புத்த கயா சர்வோதய சம்மேளனத்தில் பூஜ்ய விநோபாஜி அவர்கள் பூமிதான இயக்கத்தைப்பற்றியும் சர்வோதய சமாஜ அங்கத்தினர்களின் கடமையைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசினர். அந்தப் பிரசங்கத்தில் சம்பத்துதான சம்பந்தமாக அவர் வெளியிட்ட கருத்துக்கள் தற்சமயத்திற்கு மிகவும் அவசியமானபடியால் அந்தப் பகுதியை கீழே பிரசுரிக்கிறோம்.] — ஆசிரியர்]

இப்பொழுது பூமிதானத்தைப்பற்றிய பிரசாரம் தேசமுழுவதும் செய்து நிலமுள்ளவர்கள் பூமிதானம் செய்து தேசப்பணியில் ஈடுபட சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது. அவ்விதமே மற்றவர்களும் தேசப்பணியில் ஈடுபட ஒரு வழி ஏற்பட வேண்டும். நாம் ஒவ்வொருவரும் தினசரி சாப்பிடுகிறோம். அதற்கு முன்பு அதில் ஒரு பகுதியை, சமூகத்தின் நன்மைக்காக ஒதுக்கி வைக்கப் பழக வேண்டும். இந்தக் கருத்தை எல்லோரிடையேயும் நாம் பரப்பவேண்டும். இதைத்தான் சம்பத்து தானமென்று சொல்லுகிறோம். இதற்கு உடனடியாக தேசத்தில் தேவை ஏற்பட்டிருக்கிறது. போதுமான நிலம் தானமாகக் கிடைத்திருக்கிறது. அவைகளை உடனே விநியோகிக்க வேண்டும். நில விநியோகத்தின் அடிப்படையில் நாம் விரும்பும் கிராம நிர்மாண வேலைகளையும் துவக்க வேண்டும். இவைகளுக்குத் தேவையான சாதனங்கள் சேகரிக்கப்பட வேண்டும். அதற்காக சம்பத்தி தான இயக்கம் மிகவும் அவசியமானது. மேலும் இது மிகவும் பொருத்தமான சமயத்தில் ஆரம்பிக்கப்படுகிறது. இது விஷயமாக நீங்கள் எல்லோரும் உற்சாகத்துடன் முயற்சி செய்து ஏழையானாலும், பணக்காரரானாலும் தன்னிடம் உள்ளவற்றில் கொஞ்சம் கொடுத்துவிட்டு மற்றதைத்தான் உபயோகிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்ய வேண்டும். இந்த நீதியும், நியாயமும் பொருந்திய எண்ணம் தேச முழுவதும் பரவ வேண்டும்.

குரானில் சொர்க்கம், நரகம் இதைத்தவிர மூன்றாவது ஒரு உலகம் உண்டென்று சொல்லப்படுகிறது. அதற்கு "பர்ஜக்" என்று பெயர். அங்கிருந்து பார்த்தால் மேலே சொர்க்கமும், கீழே நரகமும் தென்படும். இந்த மத்திய உலகத்துக்குப் போகிறவர்களின் முகங்களில் ஒரு பகுதி சிரித்துக் கொண்டும், மறு பகுதி அழுதுகொண்டும் இருக்குமாம். பாதியில் சந்தோஷமும் மறு பாதியில் துக்கமும் பிரதிபலிக்குமாம். இது நடுத்தரமான நிலைமை. இந்த "பர்ஜக்" உலகிலிருப்பவர்கள் சொர்க்கத்தைப் பார்க்கும்பொழுது வருந்துகிறார்கள். நரகத்தைப் பார்க்கும் பொழுது நாம் சற்று உயர்ந்த நடுத்தர நிலைமையில் இருக்கிறோம் என்று சந்தோஷமடைகிறார்கள். உலகத்தில் உள்ள எல்லோரும் இதே நிலைமையில்தான் மத்தியில் (திரி சங்கு சொர்க்கத்தில்) இருக்கிறார்கள். நம்மிலும் அதிக வசதியுள்ளவர்கள் இருப்பதுபோல், நம்மைக்காட்டிலும் கஷ்டப்படுகிறவர்களும் அவசியம் இருக்கத்தான் செய்கிறார்கள். தன்னைக்காட்டிலும் கஷ்டப்படுகிறவர்கள் கிடையாது என்று சொல்லக்கூடிய நிலையில் ஒரு மனிதனோ, பிராணியோ கிடையாது. எனவே நாம் ஒரு நடுத்தரமான நிலைமையில் இருக்கிறோம். ஆகையால் நாம் எவ்வளவுதான் சிரமப்பட்டாலும் நம்மிலும் அதிக கஷ்டப்படுகிறவர்களுக்காக நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்கிற தர்ம சிந்தனையை பரப்பவேண்டும். இதைத்தான் **"சம்பத்து தான யக்ஞம்"** என்று சொல்லுகிறோம்.

— விநோபா

பயனுள்ள வாழ்க்கை முறை

பயன் தரத்தக்க வகையில் அநேக நிர்மாண வேலைகள் தேசத்தில் நடைபெற்று வருகின்றன. அப்படி இருந்தபோதிலும் அவைகள் எல்லாம் காந்திய முறையிலேயே நடைபெற்று வருவதாகக் கருதமுடியாது. சிலர் பசு சம்ரக்ஷணை வேலைசெய்கிறார்கள். மற்றும் சிலர் கால்நடைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிவர்த்திக்கப் பாடுபடுகிறார்கள். சுதேசி மனப்பான்மையுடனும், வேலையற்றவர்களுக்கு வேலையளிப்பதற்காகவும் அநேகர் கதரையும், கிராமப் பொருள்களையும் உபயோகிக்கிறார்கள். தன்னிச்சையை அடக்கியும், சிறிதளவு தியாகம் செய்தும், சுவர்க்கத்தின் வாயில் திறக்கப்பட வேண்டுமென்பவர்களுக்கு இந் நல்ல காரியங்களினால் பயன் ஏற்படலாம்.

இச் செயல்களெல்லாம் புகழ்வதற்கு உரியவையான போதிலும், அவைகளினூடே உண்மைக் காந்தீயமான அஹிம்சையின் தத்துவம் பரிணமிக்கவில்லை. ஒவ்வொன்றும், ஒவ்வொரு குறிப்பிட்ட பலனை அளிக்கின்றனவே தவிர பயனுள்ள வாழ்க்கையின் முழுச் சித்திரத்தையும் அவைகள் அளிக்கவில்லை. ஆரோக்கியமான கால்நடைகள் கொல்லப்படுவதினால் கிடைக்கும் புலாலை, மிருக ரக்ஷண சபையைச் சேர்ந்த அனேக ஊழியர்கள் புசிக்கிறார்கள். பசு சம்ரக்ஷண ஊழியர்கள், வியாதியால் பீடிக்கப்பட்டதும் நொண்டியும், முடமுமான மிருகங்களைக்கூட கொல்வதை சகிக்கமாட்டார்கள். ஆனால் பசுக்கள் நன்கு வளர முடியாதபடியும், அவைகளை நசுக்கியும் வரும் ஒரு பொருளாதார முறைக்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். இந்த ஊழியர்களின் எண்ணம் நல்லதாக இருந்த போதிலும், அவர்கள் அஹிம்சையை வாழ்க்கையின் சோதனையாகக் கருதுவதில்லை. அஹிம்சையே வாழ்க்கையின் சோதனையாக இருந்தால் மிருக ரக்ஷண சபையைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் மாமிசம் சாப்பிடமாட்டார்கள். அவ்விதமே பசு சம்ரக்ஷணையினால் அஹிம்சா வாழ்க்கைமுறை வளர்வதுடன், மிருக சக்தியினால் இயங்கும் கைத்தொழில்களும், பாதுகாக்கப்படும். இயந்திரக் கலப்பையினால் விவசாயம் செய்தாலும், யந்திரங்களின் மூலம் தண்ணீர் இறைப்பதாலும் மாடுகளின் மூலம் வேலை செய்வது நின்றுவிடும். ஒருவனுடைய வாழ்க்கைக்கு ஆதாரமான தொழிலை பிடுங்குவது, அவனை வாழவிடாமல் செய்வதற்கு சமமாகும். இது ஹிம்சை வழி. அநேகமாக ஏழைமக்கள் நூல் நூற்றும், மாவு அறைத்தும், நெல் குத்தியும், பிழைத்து வரும்பொழுது, இவ்வேலைகளுக்காக நவீன இயந்திரங்களைப் புகுத்துவது பொருளாதார அநீதியாகும். இந்த உண்மையை நமக்கு விளக்கியதுதான் காந்திஜி நமக்குச்செய்த பெரிய பணியாகும்.

நாம் செய்யும் எல்லா வேலைகளையும் இந்த உரைகல்லில் உறைத்துப்பார்க்க வேண்டும்.

இந்த சோதனையை திருப்தி செய்யாத எதுவும் காந்தீய முறைக்கு ஒவ்வாது. கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் எதிலும் நாம் இந்த அளவு கலை[illegible]த்தான் கடைப்பிடிக்கவேண்டும். இந்த அளவுக்கு வரமுடியாததால்தான் சமூகத்திற்கு நன்மையே செய்ய வேண்டுமென்ற நோக்கமிருந்தும் கூட அமெரிக்க பொருளாதாரமும், சோவியத் கம்யூனிசமும் போதிய பலன் அளிக்கவில்லை. எனவே போலிச்சரக்குகள் வந்துவிடாமல் இருக்க இக் கடும் சோதனையை ஞாபகத்தில் வைத்திருப்பது நல்லது.

காந்திஜி அடிப்படையிலேயே ஒரு அஹிம்சா வாதி. அவர் செய்ததெல்லாம் அஹிம்சையை வளர்ப்பதற்கே. எனவே அவரைப்பின்பற்ற விரும்புவோர் மிகவும் எச்சரிக்கையாக இருந்து சரியான வழியிலேயே செல்ல முயற்சிக்கவேண்டும். நமது தினசரி வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இம்மாதிரியாக அஹிம்சை கலந்திருந்தால்தான் உலக சமாதனத்தை அடைய முடியும்.

— ஜே. ஸி. குமரப்பா—(ஆங்கிலத்திலிருந்து)

நிந்திக்காமை விரதத்தின் மகிமை

மௌனமும் அல்ல, நிந்திக்காமையும் அல்ல

ஊழியர்களை ஒரு புதிய விரதம் எடுத்துக் கொள்ளும்படி பூஜ்ய வினோபாஜி சொல்லி வருகிறார். அதுதான் நிந்திக்காமை விரதம். அநேகர் அதனுடைய பொருளை மேலெழுந்தவாரியாகப் புரிந்துகொண்டு பிறரைப் பற்றி அவர் காணாத இடத்தில் நிந்திக்காமல் தன் நாவை அடக்கிக் கொள்ளுகிறார்கள். "மௌனமாக இருத்தலே நல்லது" என்று அநேகர் பேசாமல் இருந்துவிடுகிறார்கள். இதை மௌன விரதம் என்றே அல்லது பிற நிந்தனை அற்றது என்றோ கருத இயலாது.

ஒரு நண்பரின் கதை

என்னுடைய நண்பர் ஒருவர் சாப்பிடும் பொழுது பேசுவது கிடையாது. அநேக தடவை கேட்டபிறகு ஒரு நாள் இதற்குக் காரணம் சொன்னார். "நான் சாப்பிடும்பொழுது வீண் வம்புகளும், பொய்யும் பேச விரும்பவில்லை. எனவே மௌனமாகச் சாப்பிடுகிறேன்" என்றார். "உங்களை யார் இவ்விதம் செய்யச் சொல்லுகிறார்கள். பொய் சொல்ல வேண்டிய அவசியமும் கிடையாதே" என்று நான் பதிலளித்தேன். "ஏதோ வாய் தவறி வந்துவிடுகிறது. அவ்விதம் நேராமல் இருக்கவே மௌன விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொன்னார்.

ஆனால் சில தினங்களுக்குப் பிறகு அவர் சாப்பிடும்பொழுது தன் மனைவியின் பேரில் கோபமாக பாத்திரத்தை வீசியதைக் கண்டேன். மறுசமயம் சைகை மூலம் பொய் சொல்வதையும் பார்த்து விட்டேன். அது சமயம் அவரைப் பார்த்து நான் "ஐயா, நீங்கள் மௌனமாகவே கொலையும், நம்பிக்கை மோசமும், செய்யக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். உங்கள் மௌனவிரதத்தின் பயன் என்னவென்பது உங்களுக்குத்தான் விளங்கும்" என்றேன்.

மனப் பக்குவம் இல்லாமல் மௌன விரதம்

இம்மாதிரியே பூஜ்ய வினோபாஜி கூறிய நிந்திக்காமை விரதத்தையும் நாம் அனுஷ்டிப்போமா? ஒரு தினம், தன்னுடைய புகார்களைச் சொல்லிப் போவதற்காக ஒரு ஊழியர் வந்தார். புகார்களைச் சொல்லி வரும்பொழுது சில சக ஊழியர்களைப் பற்றியும் சொல்லவேண்டி வந்தது. அதுசமயம் அவர் சற்று தயங்கினார். "என்ன செய்வது. பிறரைப்பற்றி நிந்திக்கக் கூடாது என்று வினோபாஜி சொல்லி இருக்கிறார். எனவே பல விஷயங்களை அவரிடம் சொல்ல முடியாமல் மனதிற்குள்ளேயே வைத்திருக்க வேண்டியிருக்கிறது!" என்று சொன்னார். "நீங்கள் மனதுக்குள்ளேயே அவரைப் பற்றியே நினைத்து, புழுங்கிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?" என்று நான் கேட்டேன். "பிறகு என்ன செய்வது" என்றார் அவர். "அப்படியானால் நீங்கள் எப்படி நிந்திக்காமை என்ற விரதத்தை அனுஷ்டிக்க முடியும்? மனத்தினால்தான் சதா அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே" என்றேன், அந்த நண்பர் கோபித்துக்கொண்டு சென்றுவிட்டார்.

இருதயம் விசாலமாக வேண்டும்

பிறரை நிந்திக்காமல் இருப்பது ஒரு வெளி வேஷமல்ல. அது ஒரு மனப்பண்பாடு. இறைந்து பேசப்படுவதெல்லாம் கோபமாகவும், இனிமையாகப் பேசுவதெல்லாம் புகழ்ச்சியாகவும் இருப்பதில்லை. நாம் மனத்தால் என்ன நினைக்கிறோம் என்பதே முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். யாரைப்பற்றி பேசுகிறோமோ அவரிடம் நமக்கு உண்மையான அன்பு இருக்கிறதா? அவருடைய நன்மையைத்தான் நாம் கருதுகிறோமா? நமது இருதயத்தில் உண்மையான அன்பும், நேசமும், நமது நோக்கத்தில் நன்மையும் இருக்குமானால் நம்முடைய பேச்சில் நிந்தனை இருக்காது, புகழ்ச்சியும் இருக்காது. நிந்திக்காமை என்ற விரதம் இருதயத்தின் விசாலத்தன்மையைச் சார்ந்ததே.

கஷ்டத்தை யாரும் விரும்ப மாட்டார்கள்

புகழ்ச்சியினால் இருதயம் விரிவடைந்தும், இகழ்ச்சியினால் சுருங்கவும் செய்கிறது. புகழ்வது என்றால் ஒருவரிடம் கண்ட மேன்மையான குணங்களைப்பற்றி பேசுவது. பிறருடைய நல்ல குணங்களைப்பற்றி பேசும்பொழுதும், சிந்திக்கும்பொழுதும், நமது மனமும் விசாலமடைகிறது. பிறருடைய குறைகளைப்பற்றியே பேசியும், சிந்தித்தும் வந்தால் நமதுமனமும் கெட்டு விடுகிறது. பார்வையும் விஷப்பார்வையாகி விடுகிறது. இப்பரந்த உலகத்தில் துன்பத்தை யாரும் நாடுவதில்லை. பிறருடைய குற்றங்களையும் குறைகளையும் பற்றியே கவனிப்பது உலகத்தில் நன்மை பயக்காது. அதனால் தீமைதான் அதிகமாகும். நம்மிடையே நல்ல குணங்களைத்தான் நாம் வளர்க்க வேண்டும். மிகவும் தாழ்ந்தவர்களுக்கும், கயவர்களுக்கும்கூட மேன்மையடைவதற்கான வழிகளை நாம் காட்டவேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்கள் மேன்மையடையும் பொழுது, நாமும் மேன்மையடைவதுடன் சர்வோதயத்தின் உண்மைப் பொருளும் நன்கு விளங்கும்.

குற்றம் காண்பதற்கல்ல, நீக்குவதற்கே

கோபத்தில் ஒருவரை கண்டபடி பேச திறமை தேவையில்லை. கோபமான மனத்திலிருந்தே வார்த்தைகள் தானே வரும். ஆனால் தன் நண்பனின் குறைகளை அவனுக்கு பணிவாகவும், இனிமையாகவும் எடுத்துச் சொல்ல முதிர்ந்த நட்புரிமை வேண்டும். நண்பனின் குறைகளைப்

3-JAN 1956

பார்த்து மனம் பொறுப்பதில்லை. நீங்கள் என்னுடைய நெருங்கிய நண்பர். என் முகத்தில் ஒரு கறையைக் கண்டதும் மனம் தாளாமல் ஜாடை செய்கிறீர்கள். நான் அதைப்புரிந்து கொண்டு அதை நீக்கி விடுகிறேன். அதேபோல் என்னிடமுள்ள குற்றங்களையெல்லாம் கறையாகவே கருது வீர்கள்' அவைகளை நீக்கவே முயற்சிப்பீர்களே தவிர அவைகளைப்பற்றிய ஆராய்ச்சியில் இறங்கமாட்டீர்கள். என் முகத்தில் இருந்த கறையைப் போக்கிய மாதிரி என்னிடம் காணப்படும் குற்றங்களையும், இனிமையாகவும் அன்புடனும் போக்க முயற்சிப்பீர்கள்.

சர்வோதய சமூகத்தில் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்பவர்களே தவிர எதிர்ப்பவர்கள் யாருமில்லை. ஆகையினுல்தான்அதை தண்டனையற்ற சமூகம் என்று சொல்லுகிறோம். அதற்கு சட்ட திட்டங்கள் கிடையாது. தண்டிப்பதற்கான ஒரு ஏற்பாடும் அதில் இல்லை, இவ்விதமான சமூகத்தில் ஒழுங்குமுறை எப்படி இருக்கும்? இயற்கையற்றதும் மேலெழுந்தவாரியுமான ஒழுங்கு முறையினுல் அதன் அஸ்திவாரமே தகர்ந்துவிடும். ஆகையினுல் தான் பூஜ்ய விநோபாஜி நிந்திக்காமை என்ற விரதத்தை எடுத்துக்கொள்ளும்படி சொல்லுகிறார். நமது வேலையில் இந்த விரதத்திற்கு முக்கியமான பங்கு உண்டு.

சர்வோதய சமாஜத்திலும் சண்டையும், சச்சரவும், பூசல்களும் இருக்கின்றன என்று சிலர் சொல்லுகிறார்கள். நம்மிடையே உணர்ச்சியுள்ள ஒருநண்பர் "இதெல்லாம் சுத்தப் பொய், உலகத்தில் நமது மதிப்பை குறைப்பதற்கு செய்யப்படும் சூழ்ச்சியாகும்" என்று சொல்லுகிறார். இதற்கு சரியானபதில் நிந்திக்காமை என்ற விரதம்தான். நம்முடைய செயல்களினுல்தான் உலகத்தவர்கள் நம்மை மதிப்பார்களே தவிர, நம்முடைய பேச்சுகளினுல் அல்ல. எனவே இவ்விரதத்தின் கருத்தும், மதிப்பும் இப்புனிதமான பணியில் ஈடுபட்டுள்ள எல்லா அன்பர்களுக்கும் விளங்கவேண்டும் என கடவுளைப்பிரார்த்திப்போமாக.

— *தாதா தர்மாதிகாரி*

[ஹிந்தியிலிருந்து]

கிராமராஜ்யத்தின் சரித்திரம்

நம் கிராமம் முழுதும் ஒரு குடும்பம். இதிலிருந்து கிராமத்தில் உள்ள மக்கள் எல்லோருக்கும் ஒரே இடத்தில் சமையல் செய்து அங்கு சாப்பிட வேண்டும் என்று அர்த்தப் படுத்திக் கொள்ளக்கூடாது. தனித்தனியாகத்தான் சமையல் செய்ய வேண்டும். ஆனுல் செய்யும் செயல் ஒரு குடும்பத்தினதுபோல் நடைபெறவேண்டும், ஒருவரைப்பற்றி மற்றவர் கவலைப்படவேண்டும். இறைவனுல் அதிக செல்வமும் புத்தியும் அளிக்கப்பெற்ற அன்பர்கள் அவ்விதம் இல்லாத ஏழைகளுக்கு அவற்றைச் செலவிட வேண்டும். இறைவன் யாருக்கு வலிமை அதிகம் அளித்திருக்கிருனே அவரும் இவ்விதமே சிந்திக்கவேண்டும். இவ்விதம் ஏற்பட்டால் கிராமம் பலமடைந்து செழிப்படையும். கிராமத்தில் ஏற்படும் சண்டை சச்சரவு அங்கேயே தீர்க்கப்படவேண்டும்.

குடும்பத்தைப் போலவே கிராமம்

ஒரு குடும்பத்தில் சகோதரர்களிடையே சச்சரவு ஏற்பட்டால் எல்லா சகோதரர்களும் தகப்பனுரிடம் செல்கிருர்கள்; அவர் செய்யும் முடிவை எல்லா சகோதரர்களும் ஏற்றுக் கொள்ளுகிருர்கள். அவ்விதமே கிராமத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகள் அக்கிராமத்திலுள்ள நல்ல மனிதர்கள்முன் தீர்க்கப்படவேண்டும். நியாயம் பெற இன்று எல்லோரும் நகரங்களுக்கு ஓடுகிருர்கள். எல்லா நல்ல மனிதர்களும் நகரத்தில் தான் இருக்கிருர்களா? உங்கள் கிராமத்தில் நல்ல மனிதர்களே அஸ்தமித்து விட்டார்களா? ராவணனுடைய லங்காபுரிப் பட்டணத்திலும் விபீஷணனைப்போன்ற நல்ல மனிதர் இருந்தார். அரக்கர்களுடைய நகரத்திலும்கூட நல்லமனிதர் இருந்தபொழுது உங்கள் கிராமத்தில் இருக்கமாட்டார்களா? இறைவன் எல்லா இடத்திலும் நல்லவர்களையும் உண்டாக்கியிருக்கிருன். குழந்தையின் வயிற்றில் பசியை உண்டாக்கித் தாயின் மார்பில் பாலை உண்டாக்கியிருக்கிருன். வியாதிகளை உண்டாக்கிவிட்டு அதற்குத் தகுந்த மூலிகைகளையும் உண்டாக்கியிருக்கிருன். ஆனுல் நாம் தான் வெளிநாட்டு மருந்தின்மேல் மோகம் கொண்டு ஓடுகிருேம். ஒவ்வொரு கிராமத்திலும் தோட்டம் இருக்கிறது. அதில் பச்சிலை மூலிகைகள் பயிரிட்டால் புதிய மூலிகைகள் நமக்குக் கிடைக்கும். ஒரு நாள் உபவாசம் இருந்துவிட்டால் வயிறுசுத்தமாய்விடும், வியாதியும் மறைந்துவிடும். சண்டை சச்சரவைத் தீர்த்து நியாயம் பெற நகரங்களுக்குப் போகவேண்டிய அவசியம் இல்லை, ஒரு குடும்பம்போல் கிராம வேலையையும் நடத்துங்கள். இதுவே நம் கடமை. இதுவே என் வேண்டுகோள்.

— *விநோபா*

(தொடரும்)

நிலப் பங்கீடு

புத்த கயா தாலுவில் பல பல இடங்களில் கீழ்க்கண்டவாறு பூதானக் கமிட்டியார் நிலமில்லாதவர்களுக்கு நிலங்களை பங்கிடு செய்திருக்கிருர்கள்.

கிராமம்	குடும்பங்களின் எண்	பீகா
ஷேக்வாரா	74	121
மடிஹாசனி	36	58
குல்ஹௌரா	20	30
ராம்பூர்	10	12
ஹரிதாஸ்பூர்	13	26
கோஷிகா	67	115
	220	362

(இந்தப் பத்திரிகை கையினுல் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

இந்த இதழில்

கிராமோதய சங்கங்களின் ஆண்டுவிழா 73
சம்பத்து தானம் 74
பயனுள்ள வாழ்க்கை முறை 74
நிந்திக்காமை விரதத்தின் மகிமை 75
கிராம ராஜ்யத்தின் சரித்திரம் 76
நிலப் பங்கீடு 76

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.